வாய்விட்டு பெயர் சொல்லி அழமுடியாது
வரும் வார்த்தைகளால் உம்மை தொழ முடியாது
தாயிற்கும் தன் பிள்ளையின் முகம் தெரியாது
எங்கள் தலைமுறை உங்கள் பெயர் அறியாது
வாய்விட்டு பெயர் சொல்லி அழமுடியாது

நேற்று வரை இங்கு பூத்திருந்தீர்
பெரும் நெருப்பெனப் போகவாக் காத்திருந்தீர்ஸ *(2)*
போற்றியே பாடிட மொழிகளில்லை
கரும்புலிகளின் நினைவுகள் அழிவதில்லை
வாய்விட்டுப் பெயர் சொல்லி அழமுடியாது

காற்றுடன் காற்றெனப் போனீர்கள்
அந்தக் கடலிலும் அலையென ஆனீர்கள்ஸ *(2)*
வேற்றுடலோடு இங்கு வாருங்கள்
உங்கள் வேரினில் நீர் தெளித்தாடுங்கள்
வாய்விட்டு பெயர் சொல்லி அழமுடியாது

எதிரிக்கு நீங்களோ வெடிகுண்டு
உம்மை இழந்த பின் இருக்கிறோம் இடியுண்டுஸ *(2)*
விதியினை மாற்றிய புலியென்று
இங்கு வீசிடும் காற்றிலும் பெயருண்டு
வாய்விட்டு பெயர் சொல்லி அழமுடியாது

இந்த மண் யாரிற்கும் பணியாது
தமிழீழமண் எதிரிமுன் குனியாதுஸ *(2)*
பொங்கிடும் உணர்வுகள் உறையாது
கரும்புலிகளின் வேகங்கள் குறையாத

வாய்விட்டு பெயர் சொல்லி அழமுடியாது
வரும் வார்த்தைகளால் உமைத் தொழமுடியாது
தாயிற்கும் தன் பிள்ளையின் முகம் தெரியாது
எங்கள் தலைமுறை உங்கள் பெயர் அறியாது
வாய்விட்டு பெயர் சொல்லி அழமுடியாது